Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 21 நவம்பர், 2022

## நெஸ்லே லங்கா நிறுவனம் அதன் சிறந்த தர முகாமைத்துவத்திற்காக இலங்கை தேசிய தர விருதுகள் நிகழ்வில் விருது அங்கீகாரம் பெற்றுள்ளது

***உற்பத்தி (பாரிய) பிரிவில் வெற்றி***

தரம் மீது நெஸ்லே லங்கா நிறுவனம் கொண்டுள்ள அர்ப்பணிப்பு, எப்போதும் அதிமுக்கியத்துவடனான முன்னுரிமையாக உள்ளதுடன், இலங்கை கட்டளைகள் நிறுவனத்தால் (Sri Lanka Standards Institution - SLSI) ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை தேசிய தர விருதுகள் 2020 இல் இந்நிறுவனம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் விற்பனை செய்யப்படும் 90% க்கும் அதிகமான தயாரிப்புகளை குருநாகலில் உள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில் உற்பத்தி செய்து வருகின்ற 'நல்லுணவு, நல்வாழ்வு' நிறுவனம், உற்பத்தி (பாரிய) பிரிவில் வெற்றியாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

"எமது கடுமையான தர நியமங்களுக்காக இலங்கையிலுள்ள தேசிய தர நிர்ணய சபையினால் விருது வழங்கப்படுவது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது. நெஸ்லே நிறுவனத்தில் நாங்கள் முன்னெடுக்கின்ற அனைத்திலும் தரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு என்பன அத்திவாரமாக காணப்படுகின்றன. எனவே, இந்த அங்கீகாரம் இந்த இலக்கை நோக்கிய நமது உறுதியான அர்ப்பணிப்பைக் காண்பிப்பதுடன், அதனை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. அதே நேரத்தில், எங்கள் அன்பிற்குரிய நுகர்வோருக்கு தரத்தின் உத்தரவாதத்தையும் இது வழங்குகிறது. முன்னணி உணவு மற்றும் பான வகை நிறுவனம் என்ற வகையில், 115 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொண்டு வந்துள்ளதைப் போன்று, சுவையான மற்றும் ஆரோக்கியமான தயாரிப்புகளை வழங்கி, இலங்கை நுகர்வோரை மகிழ்விக்க நாங்கள் ஆவலாக உள்ளோம்," என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. ஜேசன் அவன்சென்யா அவர்கள் குறிப்பிட்டார்.

'அனைவரினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் உணவின் ஆற்றலை வெளிக்கொணரும்' அதன் நோக்கத்தின் உந்துசக்தியுடன், நெஸ்லே நிறுவனம் இலங்கையில் பல தலைமுறைகளாக இளமை முதல் முதுமை வரை உயர்தர உணவு மற்றும் பான வகை மூலம் அவர்களுக்கு ஊட்டமளித்துள்ளது. இந்நிறுவனம், இலங்கையில் விற்பனை செய்யப்படும் 90% க்கும் அதிகமான தயாரிப்புகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதுடன், அதன் உற்பத்தி செயல்முறையில் கடுமையான தரக் கட்டுப்பாடுகளைப் பேணுகிறது. உள்நாட்டு மற்றும் சர்வதேச உணவுப் பாதுகாப்புச் சட்டங்கள் மற்றும் தரநிலைகளுக்கு இணங்க விரிவான சோதனையுடன், ஒவ்வொரு கட்டத்திலும் கடுமையான தரச் சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. நெஸ்லே, தனது கடுமையான தரக் கட்டுப்பாடுகளை அதன் மதிப்புச் சங்கிலி முழுவதும் தொடர்புபட்ட அனைத்து தரப்பினருக்கும் விரிவுபடுத்தி, தரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு குறித்த உதவி மற்றும் பயிற்சியை வழங்குகிறது. அத்துடன், அவர்கள் தரக்கட்டுப்பாடுகளை முறையாக கடைப்பிடிப்பதை உறுதிசெய்ய வழக்கமான ஆய்வுச் சோதனைகளை முன்னெடுக்கிறது.

தர முகாமைத்துவம் மற்றும் தர சாதனைகளில் சிறந்து விளங்கும் இலங்கை நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக இலங்கை தேசிய தர விருதுகள் நிகழ்வு வருடாந்தம் நடத்தப்படுகின்றது. இந்த மதிப்புமிக்க விருது நிகழ்வுத் திட்டம் இலங்கை தரக் கட்டளைகள் நிறுவனத்தின் (SLSI) சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்புப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. SLSI என்பது இலங்கையின் தேசிய தரக் கட்டளைகள் அமைப்பு என்பதுடன், இது சர்வதேச தரக் கட்டளைகள் அமைப்பின் (ISO) அங்கத்துவ அமைப்பாகும்.

---


**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |

| | | | |
|---|---|---|---|
| நிறுவன தொடர்பாடல்கள் | இசுரி அழகயகோன் | +94760395781 | Isuri.Alahakoon@lk.nestle.com |